முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 209/2006

**வாதி தரப்பு சாட்சி–1 அப்துல் அஜிஸ் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**18 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொன்னது என்றால், நான் ஏற்கெனவே கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. விபரங்களை நான்தான் சொன்னேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், நான் கிரையம் பெற்ற சொத்தில் பிரச்சினை ஏற்பட்டதால் தாக்கல் செய்தேன். என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், எனது கிரைய ஆவணத்தில் உள்ளபடி எனக்கு சொத்து வேண்டும் என்று கேட்டுள்ளேன். தாவா சொத்தை எப்போதாவது நான் அனுபவம் செய்துள்ளேனா என்றால், கிரையம் பெற்றது முதல் எனது அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்தின் சுவாதீனத்தை எனக்கு யார் இடையூறு செய்தார்கள் என்றால், அழகர்சாமி, ராமன், அழகன், வீரன், காமாட்சி மற்றும் அவரது வகையறாக்கள். அழகர்சாமியின் சகோதரர் கிருஷ்ணன் என்றால், உறவினர் என தெரியும், சகோதரரா என தெரியவில்லை.

2) கிருஷ்ணன் என்பவரை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனைவரும் என்னை தடை செய்தார்களா என்றால் ஆமாம். பிரதிவாதிகளின் பெயர் தெரியுமா என்றால் அழகர்சாமி, ராமன், அழகன், வ.ராமன், வி.ராமன் ஆகியோரை வழக்கில் சேர்த்துள்ளேன். பிரதிவாதிகள் அனைவரும் தற்போது உயிரோடு இருக்கிறார்களா என்றால், சிலர் இறந்து விட்டார்கள். சரியாக தெரியவில்லை. பிரதிவாதிகள் எந்த தேதி, மாதம், வருடம் எனக்கு இடையூறு செய்தார்கள் என்றால் 1986 முதல் இடையூறு செய்தார்கள். எனது சாட்சிய வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் இடையூறு

கொடுத்ததாக சொல்லியுள்ள தேதி சரியானதா என்றால் சரியானது. என் தகப்பனார் அ.வ.எண். 225/1986 என்ற வழக்கை தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போது எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3) அதன் பின்னிட்டு அந்த வழக்கை வாரிசு அடிப்படையில் நாங்கள் நடத்தினோம் என்றால் சரிதான். அ.வ.எண் 225/1986 வழக்கின் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா சொத்தை பொறுத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண் 225/1986 வழக்கு முழுமையாக விசாரிக்கப்பட்டதா என்றால் விசாரிக்கப்பட்டது. மேற்படி வழக்கில் எங்கள் இடத்தை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு மேற்படி தீர்ப்புக்கு எதிராக குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீடு என்ன ஆனது என்றால், சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என மேல்முறையீட்டை திரும்ப பெற்றுக் கொண்டோம்.

4) மேல்முறையீட்டில் அதே வழக்கு மூலத்தில் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு என்ன ஆனது என்றால், ரூ.1000/- செலவுத்தொகையாக செலுத்தினால் மனு அனுமதிக்கப்படும் என நிபந்தனை விதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பணம் செலுத்தி விட்டேன். நான் பணம் செலுத்தியதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வது தவறு என்றும், தற்போதுவரை மேற்படி செலவுத்தொகையை செலுத்தவில்லை என்றும், நிபந்தனைப்படி நடந்து கொள்ளாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என் மீது அ.வ.எண்.323/2007 என்ற வழக்கில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

5) நான் மேற்படி வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்தினேனா என்றால் நடத்தினேன். மேற்படி வழக்கு விசாரணையில் மேல்முறையீடு 79/1995 ல் விதிக்கப்பட்ட நிபந்தனையின்படி ரூ.1000/- பணம் செலுத்தினேனா என கேள்வி எழுப்பியதற்கு இல்லை என்று பதில் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. அ.வ.எண் 225/1986 ல் தாவா சொத்து விபரம் மற்றும் நான்கெல்லை தவறானது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண் 225/1986 ல் சொத்து விபரத்தில் பைமாஸ் எண் 240 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது போல சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண் 225/1986 ல் வழக்கு சொத்தை பொறுத்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண் 225/1986 ல் வழக்கில் சொத்து விபரமும், இந்த வழக்கு சொத்து விபரமும் ஒன்றுதானா என்றால், அந்த வழக்கில் சரியான சர்வே எண் கொடுக்காததால்தான் சரியான சர்வே எண் போட்டு தாக்கல் செய்துள்ளேன். இரண்டு வழக்குகளிலும் சொத்து விபரம் வெவ்வேறானது என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**